கோடைக்கானலில் இடம் வாங்க விற்க அணுகவும்.
கோடைக்கானல் மற்றும் மேல் மலைப் பகுதிகளில் எஸ்டேட், பல வகை தோட்டங்கள், வீடு கேஸ்ட் ஹவுஸ் விற்க எங்களை அணுகவும்
தொடர்புக்கு:
98426-99466, 78100 - 68421, 94884 - 20449

PRGI.NO.TNTAM/25/A1635

# நீதிகதிர் எக்ஸ்பிரஸ்

NEETHIKATHIR EXPRESS
மறைக்கப்பட்ட செய்திகள் திறக்கப்படும்
காலை நாளிதழ்

நீதி கதிர் எக்ஸ்பிரஸ் சென்னை அலுவலகம்.
No.19\10 1st Floor
F1 ,7th Street, Nehru Colony,
Nanganallur, Chennai - 600061
Cell: 7810068421,9488420449
neethiPress@ gmail.com

மலர்: 01 | இதழ்: 143 | 28-11-2025 | வெள்ளி | பக்கம்- 4 | விலை- ரூ.5 | திருச்சி
Volum 01 | Issue: 143 | 28-11-2025 | Friday | Pages - 4 | Price- Rs. 5 | Trichy

## அரசியலமைப்பு கடமைகளை மக்கள் நிறைவேற்ற வேண்டும்: பிரதமர் மோடி வலியுறுத்தல்



புதுடெல்லி: நவ.28–

அரசியலமைப்பு தினத்தையொட்டி, பிரதமர் மோடி நாட்டு மக்களுக்கு எழுதிய கடிதத்தில் கூறியிருப்பதாவது: கடமைகளை செய்வதிலிருந்து உரிமைகள் பிறக்கின்றன என மகாத்மா காந்தி கூறினார். இன்று எடுக்கப்படும் கொள்கைகளும், முடிவுகளும் வருங்கால சந்ததியினரின் வாழ்க்கையை வடிவமைக்கும் என்பதை காந்தி வலியுறுத்தினார். இன்று வளர்ச்சி அடைந்த இந்தியாவை நோக்கி நாம் நகரும் போது, மக்கள் தங்கள் கடமைகளை தங்கள் மனதில் முதன்மையாக வைக்க வேண்டும். நமது நாடு நமக்கு நிறைய கொடுத்துள்ளது.

அந்த நன்றி உணர்வுடன் நமது கடமைகளை நிறைவேற்ற வேண்டும். நமது ஒவ்வொரு செயலும் அரசியலமைப்பை வலுப்படுத்தவும், தேசிய இலக்குகள் மற்றும் நலன்களை மேலும் வலுப்படுத்தவும் வேண்டும். இந்த கடமை உணர்வுடன் நாம் செயல்படும் போது நமது நாட்டின் சமூக மற்றும் பொருளாதார முன்னேற்றம் பன்மடங்கு பெருகும். அரசியலமைப்பு சட்டம் மக்களுக்கு வாக்களிக்கும் உரிமையை வழங்கி உள்ளது. அந்த உரிமையை ஒருபோதும் தவறவிடாமல் இருப்பது நமது கடமை. 18 வயது நிரம்பிய இளைஞர்களை கொண்டாடுவதற்காக ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 26ம் தேதி பள்ளிகள் கல்லூரிகளில் சிறப்பு விழாக்கள் ஏற்பாடு செய்ய வேண்டும். இதன் மூலம் நமது முதல் முறை வாக்காளர்கள் மாணவர்களாக இருப்பதோடு மட்டுமல்லாமல், தேசத்தை கட்டியெழுப்பும் செயல்பாட்டில் தீவிரமாக பங்கேற்க வேண்டும் என்பதை உணர்வார்கள்.

அரசியலமைப்பின் சக்திதான், என்னைப் போன்ற ஒரு எளிய மற்றும் பொருளாதார ரீதியாக பின்தங்கிய குடும்பத்திலிருந்து வந்த ஒருவர், 24 ஆண்டுகளுக்கும் மேலாக அரசியலில் தொடர்ந்து பணியாற்ற உதவியது. 2014 ஆம் ஆண்டு, நான் முதன்முறையாக நாடாளுமன்றத்திற்கு வந்து, ஜனநாயகத்தின் மிகப்பெரிய கோயிலின் படிகளைத் தொட்டு வணங்கிய தருணங்களை நான் இன்னும் நினைவில் வைத்திருக்கிறேன். இந்த அரசியலமைப்பு என்னைப் போன்ற பலருக்கு கனவு காணும் சக்தியையும், அந்தக் கனவுகளை நனவாக்கும் வலிமையையும் அளித்துள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

## கனமழை எச்சரிக்கை; வங்கக் கடலில் புயல் சின்னம்: அதிகாரிகளுடன் முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆலோசனை



சென்னை: நவ.28–

வங்கக் கடலில் உருவான காற்றழுத்த தாழ்வு மண்டலம் 3 மணி நேரத்தில் புயலாக மாறும் சூழ்நிலை உருவாகியுள்ளது. அதன் காரணமாக தமிழக கடலோரப் பகுதிகளில் கனமழை பெய்யத் தொடங்கும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதையடுத்து, கடலோர மாவட்டங்களில் ரெட் அலர்ட் அறிவிக்கப்பட்டு துறைமுகங்களில் புயல் எச்சரிக்கை கூண்டும் ஏற்றப்பட்டுள்ளன. புயல் நிலவரம் குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் உயர் அதிகாரிகளுடன் நேற்று காலையில் ஆலோசனை நடத்தினார். தமிழகத்தில் வட கிழக்கு பருவமழை இந்த ஆண்டு முன்னதாகவே தொடங்கிவிட்ட நிலையில் அக்டோபர் முதல் வாரத்தில் இருந்தே மழை பெய்து வருகிறது. இடையில் தென் சீனக் கடல் பகுதியில் தொடர்ச்சியாக உருவான கடும் புயல்கள் காரணமாக தமிழகத்தில் சில நாட்கள் வறண்ட வானிலை காணப் பட்டது.

கடந்த இரண்டு வாரத்தில் வங்கக் கடல் பகுதியில் காற்றழுத்த தாழ்வுப்பகுதிகள் தொடர்ச்சியாக உருவாகி வருகின்றன. இந்நிலையில், தற்போது புயல் உருவாகி அதன் மூலம் தமிழகத்தில் இந்த ஆண்டுக்கான பருவமழை பெய்யும் சாதகமான சூழ்நிலை உருவாகியுள்ளது. அதற்கு முன்னோட்டமாக இலங்கை அருகே கடந்த நான்கு நாட் களுக்கு முன்பு உருவான காற்றழுத்தம் மெல்ல வலுப்பெற்று தற்போது காற்றழுத்த தாழ்வுப் பகுதியாக மாறியுள்ளது. இலங்கை அருகே நிலை கொண்டுள்ள ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி காரணமாக இலங்கையில் காற்றுடன் கூடிய கடும் மழை பெய் துள்ளது. பெரும்பாலான இடங்கள் அங்கு மழை வெள்ளம் சூழ்ந்து பொதுமக்கள் அங்கு பாதிக்கப்பட்டுள்ளனர். இலங்கைக்கு தென்கிழக்கு பகுதியில் நிலை கொண்டு இருந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி மேலும் வலுப்பெற்று காற்றழுத்த தாழ்வு மண்டலமாக மாறி இலங்கையின் அம்பாறைக்கு மிக அருகில் நிலை கொண்டு இருக்கிறது.

யாழ்ப்பாணத்துக்கு தெற்கே 200 கிமீ தொலைவிலும், வேதாரண்யத்தில் இருந்து 250 தெற்கு தென்கிழக்கேயும் ராமேஸ்வரத்துக்கு 200 கிமீ தொலைவிலும் தற்போது நிலை கொண்டு இருக்கிறது. இது இலங்கையின் தென்கிழக்கு முனையில் இருந்து வடக்கு முனையான காங்கேசன் துறையில் இன்று இறங்கும் என்றும் கணிக்கப்பட்டது. ஆனால், காற்றின் வேக மாறுபாடு காரணமாக மேற்கண்ட ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி தற்போது வலுப்பெற்று தமிழகத்தின் கோடியக்கரை பகுதியை நோக்கி நகர்ந்து வருகிறது. இது மேலும் வலுப்பெற்று 3 மணிநேரத்தில் புயலாக மாறும் சூழல் ஏற்பட்டுள்ளது. இந்த புயலுக்கு 'டிட்வா' என்று பெயரிடப்பட்டுள்ளது. இது வட மேற்கு திசையில் நகர்ந்து தெற்கு ஆந்திரப் பகுதியை நெருங்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இதன் காரணமாக தமிழகத்தில் கடலோரப் பகுதிகளில் தொடர்ச்சியாக மழை பெய்யும் வாய்ப்பும் ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக ராமநாதபுரம், புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், கடலூர், விழுப்புரம், பெரம்பலூர் மாவட்டங்கள் மற்றும் வட கடலோர மாவட்டங்களான சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர், மாவட்டங்களிலும் மழை பெய்யத் தொடங்கும் என்பதால் அந்த மாவட்டங்களுக்கு ரெட் அலர்ட் அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், சிவகங்கை,,மயிலாடுதுறை, கடலூர் மற்றும் அரியலூர் மாவட்டங்களிலும் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யும் வாய்ப்புள்ளதால் அந்த மாவட்டங்களுக்கும் ஆரஞ்சு அலர்ட் அறிவிக்கப் பட்டுள்ளது. இதையடுத்து, மேலும் நேற்று இரவு முதல் வட கடலோர மாவட்டங்களில் கனமழை பெய்யத் தொடங்கும். பின்னர் 28 மற்றும் 29ம் தேதி திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, கடலூர், விழுப்புரம், செங்கல்பட்டு மாவட்டங்கள், புதுச்சேரி, காரைக்கால், பகுதிகளில் ஒருசில இடங்களில் கனமழை முதல் மிக கனமழை பெய்யும்.

வட மாவட்டங்களை பொறுத்தவரையில் திருவள்ளூர், சென்னை, காஞ்சிபுரம், ராணிப்பேட்டை, திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, அரியலூர், பெரம்பலூர், தஞ்சாவூர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும் கனமழை முதல் மிக கனமழை பெய்யும் என்பதால் அந்த மாவட்டங்களுக்கு ரெட் அலர்ட் அறிவிக்கப்பட்டுள்ளது. டிட்வா புயல் தமிழக கரையை நெருங்கி வருவதை அடுத்து அனைத்து துறைமுகங்களில் புயல் எச்சரிக்கை கூண்டு 1, 2, 3, 4 வரை ஏற்றப்பட்டுள்ளது. இந்த நிலையில், மழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து இன்று மாவட்ட ஆட்சியர்கள் உடன் முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆலோசனை மேற்கொண்டார். சென்னை தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற இந்த ஆலோசனை கூட்டத்தில் அதிகாரிகளுடன் முதல்வர் முக்கிய ஆலோசனை நடத்தினார்.

இந்த ஆலோசனை கூட்டத்தில் வருவாய்த் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் உள்ளிட்ட மூத்த அமைச்சர்கள், தலைமை செயலாளர் முருகானந்தம், வருவாய் நிர்வாக ஆணையர், மாநில பேரிடர் மேலாண்மை துறை உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர். மேலும், கனமழை பெய்யும் மாவட்டங்களில், காணொலி காட்சி மூலமாக ஆட்சியர்கள் உடன் முதல்வர் முன்னெச்சரிக்கை நடவடிக்கை குறித்து ஆலோசனை செய்தார். இதற்கிடையே கனமழையை எதிர்கொள்வதற்கான ஆயத்த நடவடிக்கைகள் குறித்து, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் சாத்தூர் ராமச்சந்திரன், சென்னை எழிலகத்திலுள்ள மாநில அவசரகால செயல்பாட்டு மையத்தில் ஆய்வு செய்தார்.

## முதல்வரிடம் எம்.எல்.ஏ கோரிக்கை மனு



பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக, ஈரோடு வந்திருந்த தமிழக முதல்வர் மு க ஸ்டாலினை நேரில் சந்தித்து, மொடக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் சி. சரஸ்வதி தொகுதிக்கான கோரிக்கை மனு கொடுத்தார். அருகில் அமைச்சர் சு. முத்துசாமி உள்ளார்.

## அமைச்சர் அன்பில் மகேஷுக்கு வெள்ளி யானை விருது

சென்னை: நவ.28–

பாரத சாரண, சாரணியர் இயக்கத்தின் உயரிய விருதான 'வெள்ளி யானை' விருது தமிழ்நாடு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழிக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து அமைச்சர் அன்பில் மகேஷ் எக்ஸ் பதிவில் கூறியிருப்பதாவது:

எனக்கு வழிகாட்டிய முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு இந்த விருதின் பெருமை சேரும். அவருக்கு மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். பாரத சாரண, சாரணிய வைர விழா மற்றும் கலைஞர் நூற்றாண்டு பெருந்திரள் பேரணி திருச்சியில் நடத்தி இந்தியாவே வியக்கும்படி நடத்திக் காட்ட தமிழ்நாடு சாரணர்கள் செய்த பங்களிப்பின் விளைச்சல் தான் இந்த விருது. இந்த விருதை சாரணர்களின் உழைப்புக்கு அர்ப்பணிக்கிறேன். வெள்ளி யானை விருது தந்துள்ள உற்சாகத்தோடு தமிழக மாணவர்களின் நலனுக்கு மேலும் சிறப்பாக உழைக்க ஊக்கம் பெறுகிறேன்.

## த.வெ.க.வில் இணைந்தது ஏன்? செங்கோட்டையன் பரபரப்பு விளக்கம்




சென்னை, நவ.28–

அதிமுகவில் இருந்து நீக்கப்பட்ட முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் விஜய்யின் தமிழக வெற்றிக் கழக கட்சியில் இணைந்தார். பின்னர் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்த அவர் கூறியதாவது, அதிமுகவில் புரட்சி தலைவரால் அடையாளம் காணப்பட்டவன் நான். அதிமுக உருவான போது எம் ஜி ஆர் உடன் சென்றவன் நான். புரட்சி தலைவி ஜெயலலிதாவின் பாராட்டையும் பெற்றவன். அதிமுக மீண்டும் ஒன்றனைய வேண்டும் என்று வலியுறுத்தினோம். அது நடக்கவில்லை. என்னை திட்டமிட்டு வெளியேற்றியவர் எடப்பாடி பழனிசாமி. நான் தவெகவில் இணைந்ததற்கு காரணம் உள்ளது. தமிழகத்தில் மாற்றம் வேண்டும். தமிழ்நாட்டில் தூய்மையான அரசியலை முன்னெடுத்துள்ளார் விஜய். நேர்மையான ஆட்சியை கொடுக்க ஒருவர் வேண்டும் என மக்கள் நினைக்கின்றனர். தமிழகத்தில் தூய்மையான ஆட்சி அமைவதற்காகவே தமிழக வெற்றிக் கழக கட்சியில் இணைந்தேன். தவெகவுக்கு வெற்றியை தர மக்கள் தயராக இருக்கிறார்கள். 2026 ஆம் ஆண்டு தமிழகத்தில் மக்கள் புரட்சி ஏற்படும். சட்டமன்ற தேர்தலில் விஜய் வெற்றி பெறுவார். மக்கள் மனதில் விஜய் இடம் பெற்று விட்டார். பள்ளிக் குழந்தைகள் தங்களது பெற்றோரிடம் அப்பா, அம்மா விஜய்க்கு ஓட்டு அளியுங்கள் என்று கூறும் நிலை தமிழ்நாட்டில் தற்போது உள்ளது. இளவல் விஜய் இதற்காக மாபெரும் இயக்கத்தை கட்டமைத்துள்ளார். அமைச்சர் சேகர்பாவுவை நான் சந்திக்கவே இல்லை; திமுகவில் இருந்தோ, பாஜகவில் இருந்தோ யாரும் என்னை அணுகவில்லை. தினம் ஒரு கட்சிக்கு சென்றவன் நான் அல்ல. என தெரிவித்தார்.

## முதல்வரிடம் மரியாதை சந்திப்பு



அரசு நல திட்டங்கள் துவக்க விழா மற்றும் நலவித்த உதவிகள் வழங்கும் விழாவிற்கு ஈரோடு வந்திருந்த, தமிழக முதல்வர் மு க ஸ்டாலின் அவர்களை, ஈரோடு தெற்கு மாவட்ட திமுக இளைஞர் அணி அமைப்பாளர் ஜெ. திருவாசகம் மரியாதை நிமிர்த்தமாக நேரில் சந்தித்து புத்தகம் பரிசளித்தார்.

# அதிமுக கட்சியின் அனைத்து பொறுப்புகளில் இருந்தும் முக்கிய புள்ளி நீக்கம் இபிஎஸ் அதிரடி அறிவிப்பு.



சேலம், நவ. 28–

சேலம் மாவட்டத்தில் நடந்த அதிர்ச்சிகரமான சம்பவம் அரசியல் துறையில் பெரும் அதிர்வலை ஆகியுள்ளது.பொதுமக்கள் பாதுகாப்பை முன்னிறுத்தும் சூழலில் இப்படியான குற்றச்சாட்டு விவாதமாக மாறியுள்ளது.

ஆத்தூர் அருகே ஜெயலலிதா பேரவை மாவட்ட இணைச் செயலாளராக பணியாற்றிய சங்கர், ஒரு தூய்மை பணியாளருக்கு பாலியல் தொந்தரவு செய்ததாக கூறப்பட்டதால் போலீசார் அவரை கைது செய்தனர். இந்தச் சம்பவம் வெளிச்சத்துக்கு வந்ததும், அரசியல் ரீதியாக பெரும் பரபரப்பு ஏற்படுத்தியது.

இந்நிலையில், கட்சியின் கொள்கைக்கும் ஒழுக்கத்திற்கும் எதிராக செயல்பட்டதாகக் குற்றம் சாட்டப்பட்ட சங்கர், அடிப்படை உறுப்பினர் பதவியையும் உள்ளடக்கிய அனைத்து பொறுப்புகளிலிருந்தும் நீக்கப்படுவதாக இபிஎஸ் அறிவித்துள்ளார்.

சங்கர் கைது விவகாரம், சேலம் மற்றும் சுற்றுவட்டாரங்களில் மட்டுமல்லாமல் மாநில அரசியல் அரங்கிலும் விவாதத்திற்கு வழிவகுத்துள்ளது. கட்சியின் ஒழுக்கம் குறித்து மீண்டும் கேள்விகள் எழுந்துள்ளன.

இந்த சம்பவம் அரசியல் பொறுப்புகளில் இருப்பவர்கள் சமூக நெறிமுறைகளைப் பேணும் முக்கியத்துவத்தை நினைவூட்டுவதோடு, கட்சி நடவடிக்கைகளில் தீவிரம் அவசியம் என்பதை மீண்டும் வெளிப்படுத்துகிறது.

# விழுப்புரத்தில் முஸ்லிம் மக்கள் கழகம் ஆலோசனைக் கூட்டம்

## எஸ்.ஐ.ஆர் ரத்து செய்ய வலியுறுத்தி மூன்று தீர்மானங்கள் நிறைவேற்றம்



விழுப்புரம் நவ28 :

ஒன்றிய அரசின் எஸ்.ஐ.ஆர் நடைமுறையை ரத்து செய்ய வலியுறுத்தி முஸ்லிம் மக்கள் கழகம் சார்பில் ஆலோசனைக் கூட்டம் புதன்கிழமை அன்று விழுப்புரம் தனியார் திருமண மண்டப மினி ஹாலில் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு மாநில இளைஞரணி தலைவர் வி.விக்ரம் தலைமையேற்றார். வரவேற்புரையை விழுப்புரம் நகர செயலாளர் சி. சுஹைல் முஹம்மது வழங்கினார்.

அ. மதினா, ஜை. ஆயிஷா பேகம், தேவகி, சு. அமிதா, பா. ஷாகிரா பானு, சு. பாத்திமா, இ. ஆயிஷா, இ. ஷர்மீளா உள்ளிட்டோர் முன்னிலையில் கலந்து கொண்டனர்.

சிறப்பு அழைப்பாளர்களாக முஸ்லிம் மக்கள் கழகத்தின் தலைவர் முனைவர் ச. சு. ஜைனுதீன், விழுப்புரம் மாவட்ட தலைவர் ஜா. ஷோகத் அலி, திராவிட கழக ச. பழனிவேல், மு. ஆரியசாமி, செஞ்சி தொகுதி பிரபு, முஸ்லிம் மக்கள் கழகத்தின் பா. அலாவுதீன் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர். கூட்ட நிறைவில் காணை ஒன்றிய தலைவர் ஆ. மணிகண்டன் நன்றி கூறினார்.

மேலும் இக்கூட்டத்தில் மூன்று தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்

தீர்மானம் : 1

தமிழகத்தில் எஸ்.ஐ.ஆர் நடைமுறை வாக்காளர் பட்டியலில் குழப்பத்தை ஏற்படுத்தி ஜனநாயகத்திற்கு பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் செயல்படுகிறது என்ற கருத்து கூட்டத்தில் முன்வைக்கப்பட்டது. இதனை எதிர்த்து தி.மு.க. கூட்டணிக் கட்சிகள் தொடரும் வழக்கை ஆதரிப்பதாகவும், வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகளில் ஏற்படும் குழப்பங்களை கண்டிப்பதாகவும் முஸ்லிம் மக்கள் கழகம் தெரிவித்தது.

தீர்மானம் : 2

எஸ்.ஐ.ஆர் நடைமுறை பொதுமக்களுக்கு தேவையற்ற அச்சம் மற்றும் குழப்பத்தை ஏற்படுத்தி வருகிறது எனவும், தேர்தல் ஆணையம் அலட்சியமாக நடந்து கொள்கிறது எனவும் குற்றம்சாட்டப்பட்டு, எஸ்.ஐ.ஆர் ஐ உடனடியாக ரத்து செய்ய வேண்டுமென கூட்டம் தீர்மானித்தது.

தீர்மானம் : 3

திண்டிவனத்தில் உள்ள ஆதார் மையங்களில் மக்கள் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டிய நிலை உருவாகியுள்ளது. புதிய ஆதார் பதிவு, பெயர் மாற்றம், முகவரி மாற்றம், புதுப்பித்தல் உள்ளிட்ட பணிகளுக்காக பொதுமக்கள் சிரமப்படுகின்றனர். எனவே திண்டிவனத்தில் ஒரு ஒருங்கிணைந்த ஆதார் மையம் அமைக்க மாநில, ஒன்றிய அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என முடிவு செய்யப்பட்டது.



ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர்\ மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி மாவட்ட ஆட்சியர அலுவலகத்தில் இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி ஈரோடு மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் 2026– தொடர்பான பணியினை சிறப்பாக செய்த 17 வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கு சால்வை அணிவித்து பரிசு பொருட்கள் வழங்கி வாழ்த்துக்களைத் தெரிவித்தார். உடன் மாவட்ட வருவாய்அலுவலர் சாந்தகுமார் உள்ளார்.



நாமக்கல் மாவட்டத்தில் நியாய விலை கடைகளில் விற்பனையாளர்கள் மூலம் வாக்காளர்களிடமிருந்து பூர்த்தி செய்யப்பட்ட வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் –2026 கணக்கீட்டு படிவம் பெறும் பணி நடைபெற்று வருகிறது.



திருச்சி மாவட்டம் மணப்பாறை வட்டம் கண்ணுடையான் பட்டி கிராமம் அருள்மிகு மாமுண்டி நல்லாண் டவர் திருக்கோவில் ராஜகோபுரம் கல்வேலைகள் நிறைவு பெற்று சிறப்பு பூஜைகள் செய்து நிலை வைக்கப்பட்டது இவ்விழாவில் பரம்பபறை அறங்காவலர் ஜமீன்தார் கே. ஆர்.கே.முத்துவீர லெக்கையா நாயக்கர், திருக்கோவில் செயல் அலுவலர் ந. அன்பழகன் மற்றும் ராஜகோபர கல் முழுவதும் உபயதாரர் கி. ராஜகோபால் மற்றும் பக்தர்கள் ஊர் முக்கியஸ்த்தர்கள், மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்

# முதல்வருடன் விசிக நிர்வாகி சந்திப்பு



நேற்று முன்தினம் அரசு விழாவில் கலந்து கொள்வதற்காக ஈரோடு வருகை தந்திருந்த, தமிழக முதல்வர் மு க ஸ்டாலின் அவர்களை, விசிக நிர்வாகி கமலநாதன் மரியாதை நிமித்தமாக நேரில் சந்தித்தார்.

# ஐகோர்ட் கிளையில் பாதுகாப்பு பணியில் இருந்த போலீஸ்காரர் துப்பாக்கியால் சுட்டு தற்கொலை

மதுரை: நவ.28–

ஐகோர்ட் மதுரை கிளையில் நேற்று அதிகாலை பாதுகாப்பு பணியில் இருந்த ஆயுதப்படை போலீஸ்காரர் துப்பாக்கியால் சுட்டு தற்கொலை செய்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. மதுரை மாவட்டம், உசிலம்பட்டி அருகே உள்ள எழுமலை கோட்டைப்பட்டியைச் சேர்ந்தவர் மாணிக்கம். இவரது மனைவி பொட்டியம்மா. இவர்களது இளைய மகன் மகாலிங்கம் (30). ஆயுதப்படை போலீஸ்காரரான இவர், ஐகோர்ட் கிளையில் இரவில் சுழற்சி முறையில் பாதுகாப்பு பணியில் இருந்து வந்தார். இந்நிலையில், நேற்று இரவு மகாலிங்கம் உள்ளிட்ட ஆயுதப்படை போலீஸ்காரர்கள் ஐகோர்ட் கிளை பிரதான நுழைவு வாயில் பகுதியில் எஸ்.எல்.ஆர் வகை துப்பாக்கி ஏந்தி பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர். இன்று அதிகாலை 3 மணியளவில் பாதுகாப்பு பணியில் இருந்த மகாலிங்கம், துப்பாக்கியை ஏந்திக் கொண்டு அங்கும் இங்குமாக நீண்ட நேரம் நடந்து காண்டிருந்தார்.

இதை பார்த்த மற்ற காவலர்கள் குளிராக இருப்பதால் அங்கும் இங்குமாக நடந்து கொண்டிருக்கிறாரே என எண்ணினர். இந்நிலையில், மகாலிங்கம் தான் வைத்திருந்த துப்பாக்கியால் திடீரென தன்னைத்தானே நெஞ்சில் சுட்டு ரத்த வெள்ளத்தில் சாய்ந்தார். இதைப் பார்த்து அதிர்ச்சியடைந்த சக போலீஸ்காரர்கள் ஓடி வந்து அவரை மீட்டனர். இது குறித்து உடனடியாக உயர் அதிகாரிகளுக்கு தெரிவித்தனர். ரத்த வெள்ளத்தில் கிடந்த மகாலிங்கத்தை மீட்டு ஆம்புலன்ஸ் மூலம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு அவரை பரிசோதித்த மருத்துவர்கள் வரும் வழியில் இறந்ததாக தெரிவித்தனர். இதையடுத்து அவரது உடல் பரிசோதனைக்காக மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. போலீஸ்காரர் மகாலிங்கம் தனக்கு திருமணம் ஆகவில்லை என்ற மன வருத்தத்தில் இருந்ததாக கூறப்படுகிறது.

இதனால், தற்கொலை செய்து கொண்டாரா? அல்லது வேறு ஏதேனும் காரணம் உள்ளதா என்பது குறித்து போலீசார் விசாரிக்கின்றனர். மேலும், மகாலிங்கம் தனது தற்கொலைக்கு யாரும் காரணமில்லை என கூறி கடிதம் எழுதிவைத்த பிறகே தற்கொலை செய்ததாகவும் கூறப்படுகிறது. தற்கொலை செய்த மகாலிங்கத்திற்கு ஒரு அண்ணன், இரண்டு சகோதரிகள் உள்ளனர். இதில், அண்ணன் காவல்துறையில் பணிபுரிந்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இந்தியாவின் தேர்தல் ஆணையமா? பாஜகவின் தேர்தல் ஆணையமா?

## மனிதநேயமக்கள் கட்சி பொதுச் செயலாளர் அப்துல்சமது கேள்வி.



திருச்சி, நவ. 28–

திருச்சி மாவட்டம், மணப்பாறையில் மனிதநேய மக்கள் கட்சியின் சார்பில் தேசிய அரசமைப்பு தினத்தை முன்னிட்டு அரசமைப்பு முகவுரை உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி நடைபெற்றது. மனித நேய மக்கள் கட்சியின் பொதுச் செயலாளரும் மணப்பாறை சட்டமன்ற உறுப்பினருமான அப்துல் சமது தலைமையில் அக்கட்சியினர் உறுதி மொழி ஏற்றுக் கொண்டனர். பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அக்கட்சியின் பொதுச் செயலாளர் அப்துல்சமது, நவம்பர் 26 1949 இல் இந்திய அரசமைப்பு சட்டத்தை கொண்டு வந்த போது ஆர் எஸ் எஸ் நமது பாரம்பரியத்திற்கு எதிரானது என்று அரசமைப்பு சட்டத்தை ஏற்கவில்லை. இந்தியா தொன்மை வாய்ந்த தேசம் மனுஸ்மிரிதிதான் சட்டமாக இருக்க வேண்டும் என்று அம்பேத்கார் தலைமையில் கொண்டு வரப்பட்ட சட்டத்தை நிராகரித்தவர்கள் ஆர்.எஸ்.எஸ்., ஐ சேர்ந்தவர்கள். இன்று அவர்கள் வழிநடத்தக் கூடிய் பாஜக அரசு அனைத்து மக்களுக்குமான சமத்துவம், சகோதரத்துவம், மதச்சார்பின்மை, வேற்றுமையில் ஒற்றுமை என அனைத்தையும் சீர்குலைக்கும் வேளையில் ஈடுபட்டு வருகின்றனர். அரசைமைப்பு தினத்தன்று அரசமைப்பு சட்டத்தின் முகப்புரையை வாசிக்க வேண்டும் என தமிழக முதல்வரின் முயற்சி பாராட்டுக்குறியது. அனைத்துஅமைப்புகளும் அரசமைப்புச்சட்டத்தை பாதுகாக்க முன்வர வேண்டும். அதிகாரத்திற்கு வரமுடியாத மாநிலங்களில் எஸ்ஐஆர் மூலம் ஆட்சியை பிடிக்கலாம் அதிகாரத்திற்கு வரலாம் என நினைக்கிறார்கள் நிச்சயமாக தமிழகத்தில் அவர்களது எண்ணம் பலிக்காது. தேர்தல் ஆணையத்தின் நம்பகத்தன்மை இன்றைக்கு கேள்விக்குறியாக உள்ளது. தேர்தல் ஆணையம் நம்பிக்கையற்ற நிலையில் இவ்வளவு பெரிய ஜனநாயக நாட்டை வழிநடத்தக் கூடிய தேர்தல் ஆணையம் இவ்வளவு மோசமான நிலையில் என்றைக்கும் இருந்ததில்லை. பாஜக தேர்தல் ஆணையத்தின் நம்பகத்தன்மையை குழைத்துள்ளது. இது இந்தியாவின் தேர்தல் ஆணையமா? பாஜகவின் தேர்தல் ஆணையமா ? என்ன கேட்கும் அளவிற்கு வந்துள்ளது. என அவர் குற்றம்சாட்டினார்.


# பிறந்த நாளை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள்



திண்டுக்கல் நவம்பர் 28

திண்டுக்கல் மாவட்டம் வடமதுரையில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் 49 வது பிறந்தநாள் தினத்தை முன்னிட்டு வடமதுரை மேற்கு ஒன்றியம் மற்றும் வடமதுரை மேற்கு ஒன்றிய இளைஞரணி சார்பாக அரசு பள்ளி குழந்தைகளுக்கு 200 நபர்களுக்கும் நலத்திட்ட உதவிகளை வழங்கி அதனை தொடர்ந்து வடமதுரை சௌந்தரராஜ பெருமாள் கோவிலில் சிறப்பு அபிஷேகம் நடத்தப்பட்டு ஏழைகளுக்கு துணை முதல்வர் பெயரில் அன்னதானம் வழங்கப்பட்டது விழாவிற்கு வடமதுரை மேற்கு ஒன்றிய கழகச் செயலாளர் சுப்பையன் ஒன்றிய துணைச் செயலாளர் சுப்பிரமணி, ராமசாமி, சுருளிராஜன், அன்பழகன் இளைஞர் அணி அமைப்பாளர் சிவா, செந்தில், முத்துக்குமார், சுபாஷ் சந்திரபோஸ், சாமிநாதன், மற்றும் கட்சியினர் ஏராளமான பொது மக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். விழாவிற்கான சிறப்பான ஏற்பாடுகளை ஒன்றிய செயலாளர் சுப்பையன் செய்திருந்தார்.

# திருப்பூர் மாநகர மாணவரணி அமைப்பாளர் திலகராஜ் திருமண விழாவில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பங்கேற்பு



திருப்பூர, நவ, 28

திருப்பூர் மத்திய மாவட்ட திமுக செயலாளர் திருப்பூர் தெற்கு தொகுதி சட்டப் பேரவை உறுப்பினருமான க செல்வராஜ் எம்எல்ஏ அவர்களதுதவப்புதல்வன் மாநகர மாணவரணி செயலாளர் செ திலகராஜ் அவர்களின் திருமண விழா பப்பிஸ் ஹோட்டலில் நடைபெற்றது இந்த விழாவினை சிறப்பிதற்காக தமிழக துணை முதலமைச்சரும் திமுக கழக இளைஞரணி இளைஞரணி செயலாளர் திரு உதயநிதி ஸ்டாலின் பங்கேற்ற போது எடுக்கப்பட்ட புகைப் படம் உடன் முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி. ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் பிரகாஷ். திருப்பூர் மாநகராட்சி மேயர் தினேஷ்குமார். மாநில மாணவரணி செயலாளர் ராஜீவ் காந்தி. தெற்கு மாநகரச் செயலாளர் டி கே டி மூ நாகராஜ் மற்றும்

அவரது குடும்பத்தினர் உறவினர்கள் மற்றும் முன்னாள் அமைச்சர்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் திமுக மாநில மாவட்ட நிர்வாகிகள் உறவினர்கள் பங்கேற்றனர்...

# நாமக்கல் மாவட்டத்தில் பூர்த்தி செய்யப்பட்ட வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் 2026 கணக்கீட்டு படிவங்களை சமர்ப்பிக்க கடைசி நாள் 04.12.2025

## மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் துர்காமூர்த்தி தகவல்.



நாமக்கல், நவ. 28–

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி நாமக்கல் மாவட்டத்தில் உள்ள அனைத்து சட்டமன்ற தொகுதிகளிலும் கடந்த 04.11.2025 முதல் 1629 வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் மூலம் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம்2026 கணக்கீட்டுப் படிவங்களை வாக்காளர்களுக்கு வழங்கி நிரப்பப்பட்ட படிவங்களை மீண்டும் பெற்று BLO App மூலம் பதிவேற்றும் பணி நடைபெற்று வருகிறது. மேலும், கணக்கீட்டு படிவங்களை பூர்த்தி செய்து மீண்டும் வாக்குச் சாவடி நிலை அலுவலர்களிடம் தொடர்புடைய வாக்காளர்கள் திருப்பி வழங்க வசதியாக கடந்த 25.11.2025 முதல் அந்தந்த வாக்குச்சாவடி மையங் கள் மற்றும் அனைத்து அரசு/ அரசு உதவி பெறும் பள்ளிகள் மற்றும் அனைத்து நியாய விலைக் கடைகளிலும் தேவையான வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. பூர்த்தி செய்யப்பட்ட வாக்காளர் பட்டியல் கணக்கீட்டு படிவங்களை திரும்ப வழங்க கடைசி நாள் 04.12.2025 ஆகும்.

எனவே, கணக்கீட்டு படிவத்தை சமர்ப்பிக்க கடைசி தேதி நெருங்குவதால், வாக்காளர்கள் இறுதிவரை காத்திருக்காமல் ஓரிரு நாட்களில் மாநகராட்சி,நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சிகளில் பணிபுரியும் பணியாளர்கள்,வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் மற்றும் வாக்குச்சாவடி நிலை அலுவலர்களின் முகவர்கள், சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பு அலுவலகங்களில் திரும்ப கொடுத்து, தங்களது பெயர் வரைவு வாக்காளர் பட்டியல் 2026ல் இடம்பெறுவதை உறுதி செய்துகொள்ளுமாறு நாமக்கல் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் துர்காமூர்த்தி, தெரிவித்துள்ளார்.



நாமக்கல் மாவட்ட தேர்தல்அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் துர்காமூர்த் இராசிபுரம் வட்டாட்சியர் அலுவலகத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் –2026 கணக்கீட்டு படிவங்களை பதிவேற்றம் செய்யும் பணியினை ஆய்வுமேற்கொண்டார்.

# வடமதுரை பேரூர் திமுக சார்பில் உதயநிதி பிறந்தநாள் விழா.




திண்டுக்கல் நவம்பர் 28.

திண்டுக்கல் மாவட்டம் வடமதுரை காந்தி சிலை அருகில் வடமதுரை பேரூர் திமுக சார்பில் துணை முதல்வர் உதயநிதி பிறந்தநாள் விழா காந்தி சிலை அருகில் பேரூர் கழகச் செயலாளர் மெடிக்கல் கணேசன் தலைமையில் கொண்டாடப்பட்டது விழாவில் தூய்மை பணியாளர் உட்பட நூறு பெண்களுக்கு சேலை வழங்கி அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது விழாவில் பேரூர் துணைச் செயலாளர் வீரமணி ,அழகுமலை, கார்த்திகேயன், கவுன்சிலர்கள் சௌந்தர்ராஜ், சுப்பிரமணி, வேல்முருகன், விஜயா, மற்றும் மாவட்ட மாணவர் இளைஞர் அணி நிர்வாகிகள் வார்டு செயலாளர் நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர் விழாவிற்கான ஏற்பாடுகளை வார்டு கவுன்சிலருமான நகரச் செயலாளர் கணேசன் செய்திருந்தார்.

# திருவள்ளூர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் தேர்வு செய்வதற்கான கலந்தாய்வுக் கூட்டத்தில் நிர்வாகிகள் மற்றும் கட்சியினர் விருப்ப மனு



திருவள்ளூர் நவ 28 :

திருவள்ளூர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் தேர்வு செய்வதற்கான கலந்தாய்வுக் கூட்டத்தில் ஆர்வத்துடன் பங்கேற்று நிர்வாகிகள் மற்றும் கட்சியினர் ஆகியோர் விருப்ப மனு படிவங்களை பார்வையாளரிடம் வழங்கினர். அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் சங்கதன் ஶ்ரீஜன் அபியான் திட்டம் ராகுல் காந்தி வழிகாட்டுதலோடு நாடு முழுவதும் காங்கிரஸ் பேரியக்கத்தை வலுப்படுத்தும் நோக்கத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் அடிப்படையில் ஒவ்வொரு மாவட்டந்தோறும் மாவட்ட தலைவர்களை நியமனம் செய்வதில் அனைத்து நிலைகளிலும் பணியாற்றும் காங்கிரஸ் நிர்வாகிகள், தொண்டர்கள் சந்தித்து கருத்துக்களை கேட்டறிந்து வருகின்றனர்.

அதற்கான திருவள்ளூர் தனியார் அரங்கில் மாவட்ட தலைவர் குறித்த கருத்துக்களை கேட்டறிவதற்கான நிர்வாகிகள் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் அகில இந்திய பார்வையாளரும், அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் செயலாளருமான பி.எம்.சந்தீப், மாநில செயலாளர் ஏஜிஏ கிருஷ்ணமூர்த்தி, முன்னாள் மாவட்ட தலைவர்கள் கோவி. சிற்றரசு, வி.பி.அண்ணாமலை மற்றும் மாநில பொறுப்பாளர்கள் ஆகியோர் கட்சியை எந்த வகையில் பலப்படுத்தலாம். அதேபோல், தகுதியான மாவட்ட தலைவரை தேர்வு செய்வது தொடர்பாகவும் கட்சியினரிடம் கேட்டறிந்தனர்.

அப்போது, நிர்வாகிகள் கோஷ்டியாக இல்லாமல் அனைவரும் ஒருங்கிணைந்து செயல்படவும் என ராகுல் காந்தி வலியுறுத்தியுள்ளார். அதனால், அனைவருடனும் ஒருங்கிணைந்து செயல்படும் வகையில் மாவட்டத் தலைவர்களின் செயல்பாடும் இருப்பதும் என வலியுறுத்தினர். அதைத் தொடர்ந்து இந்த மாவட்டத்தில் வடக்கு, தெற்கு மற்றும் ஆவடி மாநகர தலைவர் பதவிக்கு போட்டியிட விரும்புவோர் மற்றும் கட்சி நிர்வாகிகளிடம் விருப்ப மனு படிவங்களையும் பார்வையாளரிடம் வழங்கினர்.

அதேபோல், அடுத்த மாதம் 5 ஆம் தேதி வரையில் படிவங்கள் பெறப்பட உள்ளதாகவும் பார்வையாளர்கள் தெரிவித்தனர். அப்போது, வடக்கு மாவட்ட காங்கிரஸ் தலைவரும், பொன்னேரி சட்டப் பேரவை உறுப்பினருமான துரை.சந்திரசேகர், முன்னாள் மாவட்ட தலைவவர் ஏ.ஜி.சிதம்பரம், நிர்வாகிகள் சசிகுமார், கலீல், திவாகர், அருள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்!

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்துள்ளார். கொள்கைப் பற்றோடு உழைப்பிலும் உயர்ந்து வரும் உதயநிதிக்குப் பிறந்தநாள் வாழ்த்துகள். இளைஞரணிச் செயலாளராக விளையாட்டுத் துறை அமைச்சராக துணை முதலமைச்சராக நீ ஆற்றிவரும் பணிகளை மக்களும் கழகத்தினரும் பாராட்டிச் சொல்வதைக் கேட்கும்போது தந்தையாக மட்டுமல்ல தலைவனாக மகிழ்ச்சி அடைகிறேன் என்று பதிவிட்டுள்ளார்.

# தனுஷ்கோடியில் சூறைக்காற்றுடன் கடல் சீற்றம்: வீடுகளில் ஊற்றுத்தண்ணீர் வருவதாக மீனவர்கள் வேதனை

ராமேஸ்வரம்: நவ.28–

வங்கக்கடலில் நிலவி வரும் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் காரணமாக ராமேஸ்வரத்து அடுத்த தனுஷ்கோடியில் கடல் சீற்றத்துடன் காணப்படுவதால் மீனவ கிராம மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். வங்கக்கடலில் உருவாகியுள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலையில், ராமநாதபுரம் மாவட்டம் கடலோர பகுதியான ராமேஸ்வரம், பாம்பன் பாலம் உள்ளிட்ட பகுதியில் கடந்த ஒரு வாரத்துக்கு மேலாக பலத்த சூறைக்காற்று வீசி வருகிறது. அதுமட்டும் இல்லாமல் கடல் சிற்றதுதான் காணப்படுகிறது. ராமேஸ்வரம், பாம்பன் பாலம் உள்ளிட்ட பகுதியில் கடந்த 2 நாட்களாக விட்டு விட்டு கனமழை பெய்து வருகிறது.

ராமேஸ்வரம் அடுத்துள்ள தனுஷ்கோடி பகுதியில் மணிக்கு 40கிலோ மீட்டர் வேகத்தில் இருந்து 50 கிலோ மீட்டர் வேகத்தில் பலத்த சூறைக்காற்று வீசி வருகிறது. இதன் காரணமாக தனுஷ்கோடி பகுதியில் கடல் சிற்றதுடன் காணப்படுகிறது. இதில் தனுஷ்கோடி பகுதியில் உள்ள கிராமத்தில் 200 க்கு மேற்பட்ட நாட்டுப்படகு மீனவ குடும்பங்கள் வாழ்ந்து வருகிறார்கள். அந்த பகுதிக்கு செல்லக்கூடிய பிரதான சாலை கடல் நீர்மட்டம் மற்றும் மழை நீர் ஆகியவற்றால் முற்றிலும் மூழ்கி இருக்கிறது. இதன் காரணமாக அந்த பகுதியில் இருந்து வரக்கூடிய மக்கள் வெளியே செல்ல முடியாமலும், உள்ளே போகமுடியாமாலும் தவித்து வருகின்றனர்

மேலும் கடற்கரை ஓரத்தில் மீனவ கிராம இருப்பதினால் கடல் நீர் ஊர்க்குள்ள புகுந்து இருக்கிறது. இது குறித்து அந்த பகுதி மக்களிடம் கேட்டபோது, இது போன்ற புயல் காலங்களில் கடல் சிற்றம் இயல்பான ஒன்று தான் ஆனால் இன்னைக்கு வழக்கத்தை விட காற்று வேகம் அதிகமா உள்ளது. அதேபோல் கடல் சிற்றம் அதிகமா இருக்கு. இதன் காரணமாக இந்த பகுதியில் இருக்கமுடியாத சூழ்நிலை இருக்கிறது. இதற்கு அரசு நடவடிக்கைஎடுக்கவேண்டும்என தெரிவித்துள்ளனர்.

# திருவள்ளூர் மாவட்ட தலைநகரான திருவள்ளூரில் கடந்த சில நாட்களாக பெய்த மழையால் சேதமடைந்த சாலைகளால் பள்ளி, வேலைக்கு செல்பவர்கள், வாகன ஓட்டிகள் அவதி

திருவள்ளூர் நவ 28 :

திருவள்ளூர் மாவட்ட தலைநகரான திருவள்ளூரில் கடந்த சில நாட்களாக பெய்த வடகிழக்கு பருவ மழையால் இங்குள்ள சாலைகள் பெரும்பாலும் சேதமடைந்தது. இதனால் வாகன ஓட்டிகள் சாலையில் செல்ல முடியாத நிலை உள்ளது. இரு சக்கர வாகனத்தில் செல்பவர்கள் குழந்தைகளை பள்ளிக்கு ஏற்றிச் செல்லும் போது விபத்துகள் ஏற்படும் அபாயம் உள்ளது.

அதிலும் குறிப்பாக வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், நகராட்சி அலுவலகம் எதிரில், பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு செல்லும் பகுதியில் கடந்த சில நாட்களாக பெய்த மழையின் போது சேதமடைந்த சாலைகளை சீரமைக்க பொதுமக்கள் தொடர்ந்து மாவட்ட நிர்வாகத்திற்கு கோரிக்கை விடுத்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என கூறப்படுகிறது. இதனால் மாவட்ட நிர்வாகத்தின் அலட்சியத்தால் திருவள்ளூர் பகுதி வாழ் மக்களிடையே கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

எனவே, மாவட்ட கலெக்டர் திருவள்ளூர் நகரின் மையப் பகுதியும், முக்கிய சாலையான ஜெ.என். சாலையில் சேதமடைந்த சாலையை சீரமைக்காமல் தடுப்பு அமைத்திருப்பதால் வாகனங்கள் அதிகளவில் வரும் போது விபத்துகள் எற்படும் அபாயம் உள்ளது. எனவே நகராட்சி அலுவலகம் மற்றும் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம் எதிரே சேதமடைந்து அதனால் அசம்பாவிதம் ஏற்படாமல் இருக்க மாவட்ட நிர்வாகம் சார்பில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொது மக்கள், வாகன ஓட்டிகள், பள்ளி மாணவிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# புதுச்சேரியில் போலி மருந்து விவகாரம் ஆளும் அரசை கண்டித்து ஜே.சி.எம் (JCM) மக்கள் மன்றம் ஆர்ப்பாட்டம்! ஆளுநரிடம் புகார் மனு அளிப்பு



புதுச்சேரி, நவ. 28–

புதுச்சேரியில் போலி மருந்து மற்றும் மாத்திரைகள் தயாரிக்கப்படுவதையும், அதனால் பொதுமக்கள் கடுமையாகப் பாதிக்கப்படுவதையும் தடுக்கத் தவறிய ஆளும் அரசை கண்டித்து ஜே.சி.எம் (JCM) மக்கள் மன்றம் சார்பில் இன்று கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து, இந்த விவகாரம் தொடர்பாகத் துணைநிலை ஆளுநரிடம் மனுவும் அளிக்கப்பட்டது.

புதுச்சேரியில் போலி மருந்துகள் தாராளமாகப் புழங்குவதைக் கண்டித்தும், மக்களின் உயிருக்கு ஆபத்து விளைவிக்கும் இந்தச் செயலைத் தடுக்காத மாநில அரசை கண்டித்தும் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதற்கு ஜே.சி.எம் (JCM) மக்கள் மன்றத் தலைவர் திரு. ரீகன் தலைமை தாங்கினார். வில்லியனூர் தொகுதி தலைவர் திரு. பூக்கடை ரமேஷ் முன்னிலை வகித்தார். இதில் ஏராளமான ஜே.சி.எம் மக்கள் மன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டு, அரசுக்கு எதிராக முழக்கங்களை எழுப்பினர்.

ஆர்ப்பாட்டத்தைத் தொடர்ந்து, ஜே.சி.எம் மக்கள் மன்றத் தலைவர் ரீகன் மற்றும் நிர்வாகிகள், புதுச்சேரி ஆளுநர் மாளிகைக்கு (ராஜ் நிவாஸ்) சென்றனர். அங்கு புதுச்சேரி துணைநிலை ஆளுநர் கைலாசநாதன் அவர்களை நேரில் சந்தித்து, போலி மருந்து விவகாரம் குறித்துப் புகார் மனுவை அளித்தனர்.

அந்த மனுவில், "புதுச்சேரியில் பொது மக்களின் உயிருக்கு அச்சுறுத்தலாக இருக்கும் போலி மருந்து தயாரிப்பு நிறுவனங்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்," என்று வலியுறுத்தப் பட்டுள்ளது.



திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியரகத்தில் 76வது இந்திய அரசியலமைப்பு தினத்தை முன்னிட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் சரவணன் தலைமையில் இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் முகப்புரையை அனைத்துத்துறை அரசு அலுவலர்கள் வாசித்தனர்.



திருச்சிராப்பள்ளி மாவட்டம் துறையூர் ஊராட்சி ஒன்றியம் காளிப்பட்டி பகுதியில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் வைக்கப்பட்டுள்ள புகைப்படக்கண்காட்சியினை ஏராளமான பொதுமக்கள் பார்வையிட்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை சார்பில் ஈரோடு' மாவட்டம், மொடக்குறிச்சி, ஜெயராமபுரத்தில் சுதந்திரப் போராட்ட வீரர் மாவீரன் பொல்லான் அவர்களின் முழு திருவுருவச் சிலையுடன் கூடிய அரங்கத்தை திறந்து' வைத்து, மாவீரன் பொல்லான் அவர்களின் வாரிசுதாரர்கள் வரதராஜன், முருகன், வீரன்,பழனிச்சாமி, ராஜன் ஆகியோருக்கு சால்வை அணிவித்து சிறப்பு செய்தார். இவ்விழாவில்,நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ. வேலு, வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி,தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா. மதிவேந்தன், மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் என். கயல்விழி செல்வராஜ், நாடாளுமன்ற உறுப்பினர்கள் அந்தியூர் செல்வராஜ, கே.இ.பிரகாஷ், மாதேஸ்வரன், சட்டமன்ற உறுப்பினர்கள் வி. செந்தில்பாலாஜி, வி.சி.சந்திரகுமார், ஏ.ஜி. வெங்கடாசலம், ஈ.ஆர். ஈஸ்வரன், ஆதிதமிழர் பேரவையின் நிறுவனத் தலைவர் அதியமான் உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளின் தலைவர்கள், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் வே.ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா. வைத்திநாதன், ஈரோடு" மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. எஸ். கந்தசாமி, தூய்மைப் பணியாளர் நல வாரியத்தின் தலைவர் டாக்டர் திப்பம்பட்டி வெ.ஆறுச்சாமி, துணைத் தலைவர் கனிமொழி பத்மநாபன், மாவீரன் பொல்லான் அவர்களின் வாரிசுதாரர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# திருவள்ளூர் மாவட்டத்தில் வெவ்வேறு இடங்களில் கண்டெடுக்கப்பட்ட 2 ஆண் குழந்தைகளை தத்து கொடுக்கப்படும் : மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் அறிவிப்பு

திருவள்ளூர் நவ 28 :

கடந்த 20.10.2025 அன்று அதிகாலை சுமார் 5 மணியளவில் திருவள்ளூர் மாவட்டம், ஆரணி, ரெட்டித் தோப்பு, நாராணமூர்த்தி ஆரணி, ரெட்டி தோப்பு, நாராணமூர்த்தி ஸிவீநீமீ விவீற்றீ பகுதியில் பிறந்து சில மணி நேரமே ஆன ஆண் குழந்தை இருப்பதாக பொதுமக்கள் வாயிலாக சி3 ஆரணி காவல் நிலையத்திற்கு கிடைக்கபெற்ற தகவலின் அடிப்படையில் குழந்தை மீட்கப்பட்டு, அன்றே மேல் சிகிச்சைக்காக திருவள்ளூர் அரசு தலைமை மருத்துவ மனையில் அனுமதிக்கப் பட்டது.



மேலும்,தொடர் சிகிச்சைக்கு பின் 05.11.2025 அன்று குழந்தை Discharge செய்யப்பட்டு, இக்குழந்தைக்கு கிரஷ் என்று பெயர் சூட்டப்பட்டு குழந்தை நலக்குழு தலைவர் சு. தென்பாண்டியன் மற்றும் உறுப்பினர்கள், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் ம.நிஷாந்தினி, நன்னடத்தை அலுவலர் சு.சுதா ஆகியோர் முன்னிலையில், அகேப் லைப் லைன் சில்ரன்ஸ் ட்ரஸ்ட் சிறப்பு தத்து மையத்திற்கு குழந்தை தற்காலிக மாக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இக்குழந்தைக்கு உரியவர்கள் யாரேனும் இருப்பின் தங்கள் ஆட்சேபனையை இவ்வறிவிப்பு வெளியான நாளிலிருந்து 15 நாட்களுக்குள், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு, எண்.118, ஞி' பிளாக், முதல் தளம், மாவட்ட ஆட்சியரகம், திருவள்ளூர் 602 001 என்ற முகவரியில் தெரியப்படுத்து மாறு கேட்டுக் கொள்ளப்படு கிறது. மேற்படி ஆட்சேபனை எதுவும் தெரிவிக்காத பட்சத்தில் இக்குழந்தையை தத்துகேட்டுவிண்ணப்பித்துள்ள பெற்றோருக்கு தத்து கொடுக்கப்படும் என்று மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் தெரிவித்தார்.

அதே போல் கடந்த 23.10.2025 அன்று திருவள்ளூர் அரசு தலைமை மருத்துவமனையில் ஆண் குழந்தையை பிரசவித்த தாய் எந்த தகவலும் தெரிவிக்காமல் குழந்தையை விட்டு சென்றதாக மருத்துவமனையிலிருந்து தகவல் பெறப்பட்டதின் பேரில், சைல்டு ஹெல்ப் லைன் பணியாளர் நேரில் சென்று விசாரித்ததில் திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த ராணி என்பவருக்கு திருமணமான மூன்று மாதத்தில் கணவர் விபத்தில் இறந்து விட்டதாகவும், அவர் சென்னைக்கு வந்தபோது பிரசவலி வந்து கடந்த 23.10.2025 அன்று திருவள்ளூர் அரசு தலைமை மருத்துவ மனையில் ஆண் குழந்தையை பிரசவித்ததும், 03.11.2025 அன்று எந்த தகவலும் தெரிவிக்காமல் குழந்தையை விட்டு சென்றதும் தெரியவந்தது.

மேலும், குழந்தைக்கு தொடர் சிகிச்சை அளிக்கப்பட்டு, 05.11.2025 அன்று குழந்தைக்கு இளமாறன் என்று பெயர் சூட்டப்பட்டு குழந்தை நலக்குழு தலைவர் சு.தென்பாண்டியன் மற்றும் உறுப்பினர்கள், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் ம.நிஷாந்தினி, நன்னடத்தை அலுவலர் சு.சுதா ஆகியோர் முன்னிலையில், விழுப்புரம் மாவட்டத்தில் செயல்படும் Association For Rural Mass India (ARM) சிறப்பு தத்து மையத்திற்கு குழந்தை தற்காலிகமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இக்குழந்தைக்குரியவர்கள் யாரேனும் இருப்பின் தங்கள் ஆட்சேபனையை இவ்வறிவிப்பு வெளியான நாளிலிருந்து 15 நாட்களுக்குள், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு, எண்.118, ஞி;' பிளாக், முதல் தளம், மாவட்ட ஆட்சியரகம், திருவள்ளூர் 602 001 என்ற முகவரியில் தெரியபடுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேற்படி ஆட்சேபனை எதுவும் தெரிவிக்காத பட்சத்தில் இக்குழந்தையை தத்து கேட்டு விண்ணப்பித்துள்ள பெற்றோருக்கு தத்து கொடுக்கப்படும் என்று மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் தெரிவித்தார்.

# ஈரோடு மாநகராட்சி நியமன உறுப்பினர் பதவியேற்பு



தமிழ்நாடு முழுவதும், உள்ள மாநகராட்சி, நகராட்சி, மற்றும் பேரூராட்சிகளில் நியமன உறுப்பினர் பதவி ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதன்படி ஈரோடு மாநகராட்சியில் செந்தில்குமார் என்பவர் ஈரோடு மாநகராட்சி நியமன உறுப்பினராக தேர்வு செய்யப்பட்டுள்ள நிலையில், அவர் நேற்று காலை மாநகராட்சி ஆணையாளர் அலுவலகத்தில் பதவியேற்றுக்கொண்டார். அவருக்கு ஆணையாளர் அர்பித் ஜெயின் பதவி பிரமாணம் செய்து வைத்தார். உதவி ஆணையாளர் தனலட்சுமி மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் பங்கேற்றனர்.

# சேலம் ஆவினில் 4,995 பேருக்கு நலத் திட்ட உதவிகள்.

## அமைச்சர்கள்:ரா.ராஜேந்திரன் மற்றும் மனோ தங்கராஜ் வழங்கினர்.

சேலம், நவ.28–

தேசிய பால் தினத்தையொட்டி சேலம் ஆவினில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 4,995 பயனாளிகளுக்கு ரூ.22.61 கோடி மதிப்பிலான நலத் திட்ட உதவிகளை பால்வளத் துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ்,சுற்றுலாத் துறை அமைச்சர் ரா.ராஜேந் திரன் ஆகியோர் வழங்கினர்.



சேலம் ஆவின் பால் பண்ணையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் கடனுதவி, புதிய பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்திற்கான பதிவு ஆணைகள், சிறந்த கறவை மாடுகள் பராமரிப்பு, சிறந்த செயற்கை முறை கருவூட்டல் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களின் கீழ் நலத்திட்ட உதவிகளை அமைச்சர்கள் த.மனோ தங்கராஜ்,ரா.ராஜேந்திரன் வழங்கினர்.

தொடர்ந்து, 'வள மாகும் பால் வளத் துறை தடம் பதிக்கும் தமிழ்நாடு' என்ற சிறப்பு கையேட்டை அமைச்சர்கள் வெளியிட்டனர்.

நிகழ்ச்சியில் அமைச்சர் த.மனோ தங்கராஜ் பேசுகையில், திமுக ஆட்சிப் பொறுப்பேற்ற தும், பால் உற்பத்தி யாளர்களுக்கு லிட்டருக்கு ரூ. 3 உயர்த்தப்பட்டது. பால்வளத் துறை அமைச்சராக மீண்டும் நான் பொறுப்பேற்றதும், பாலுக்கு மூன்று ரூபாய் ஊக்கத்தொகை வழங்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

அதை ஏற்று, மூன்று ரூபாய் கூடுதல் ஊக்கத்தொகை வழங்க முதல்வர் ஆணையிட்டார். மேலும், பாலின் தரத்தை உயர்த்த வேண்டும் என்ற நோக்கில் தரமான பால் வழங்கக் கூடிய விவசாயிகளுக்கு கூடுதலாக ஒரு ரூபாய் ஊக்கத்தொகையும் வழங்கப்படுகிறது என்றார்.

பின்னர், சேலம் ஆவின் சார்பில் நடத்தப்பட்ட ரத்த தான மற்றும் மருத்துவ முகாமை அமைச்சர்கள் தொடங்கி வைத்தனர். முன்னதாக, தளவாய்ப்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளியில் 200 க்கும் மேற்பட்ட பள்ளி மாணவ, மாணவியர்கள் பங்கேற்ற பால் ஊட்டச்சத்து குறித்த விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் ரா.பிருந்தா தேவி, பால்வளத் துறை ஆணையர்,மேலாண்மை இயக்குநர் அ.ஜான் லூயிஸ், சேலம் மேற்கு சட்டப் பேரவை உறுப்பினர் ரா.அருள், மாவட்ட வருவாய் அலுவலர் ரா.ரவிக்குமார், ஆவின் பொதுமேலாளர் ப.குமரேஸ்வரன் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

# முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் கோரிக்கை மனு



ஈரோடு வருகை தந்திருந்த தமிழக முதல்வர் மு க ஸ்டாலினை, தமிழ்நாடு நெசவாளர்கள் சங்கங்களின் கூட்டமைப்பு பிரதிநிதிகள் ப. கந்தவேல், சி. ஜெகநாதன், எஸ் ரமேஷ் உள்ளிட்டோர் நேரில் சந்தித்து கோரிக்கை மனு கொடுத்தனர். அருகில் அமைச்சர் சு. முத்துசாமி, ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி. சி சந்திரகுமார் ஆகியோர் உள்ளனர்.

# பெண் கல்வியும் பாதுகாப்பும் விழிப்புணர்வு கருத்தரங்கம்...!



வந்தவாசி, நவ 28:

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி அடுத்த கீழ்க்கொடுங் காலூர் அரசினர் மகளிர் உயர்நிலைப் பள்ளியில் பெண் கல்வியும் பாது காப்பும் கருத்தரங்கம் மற்றும் போக்சோ விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்விற்கு பள்ளி தலைமை ஆசிரியை வினோதினி (பொறுப்பு) தலைமை தாங்கினார். ஸ்ரீ கிருஷ்ணா கல்வி மைய முதல்வர் பா. சீனிவாசன், கலாம் பவுண்டேசன் நிர்வாகி சீ.கேசவராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பள்ளி ஆசிரியை தமிழ் இலக்கியா வரவேற்றார்.

சிறப்பு அழைப் பாளராக, அனைத்து மகளிர் காவல் நிலைய ஆய்வாளர் ஆர்.மங்கையர்க்கரசி பங்கேற்று, பெண் கல்வியும் பாதுகாப்பும் என்ற தலைப்பில் சிறப்புரை ஆற்றினார். மேலும் போக்சோ விழிப்புணர்வு தகவல் களை வழங்கினார். சப் இன்ஸ்பெக்டர் சாந்தி, செல்போன் தாக்கத்தால் மாணவிகள் அதிக அளவில் பாதிப்புக்கு உள்ளாவதாக பேசினார். மேலும் பல்திறன் போட்டிகளில் சிறப்பிடம் பெற்ற மாணவிகளுக்கு புத்தக பரிசுகள் வழங்கப் பட்டது. இறுதியில் பள்ளி ஆசிரியை ஜெயபாரதி நன்றி கூறினார்.

# சென்னை ஈ.சி.ஆர். ஓ.எம்.ஆர். சாலையை இணைக்கும் உயர் இரும்பு மேம்பாலம் அமைக்க அனுமதி!

சென்னை: நவ.28–

சென்னை ஈ.சி.ஆர். ஓ.எம்.ஆர். சாலையை இணைக்கும் உயர் இரும்பு மேம்பாலம் அமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. உயர்மட்ட இரும்பு மேம்பாலம் அமைக்க தமிழ்நாடு மாநில கடலோர மண்டல மேலாண்மை ஆணையம் அனுமதி வழங்கி உள்ளது. ஈ.சி.ஆர். ஓ.எம்.ஆர். சாலையை இணைக்கும் வகையில் ரூ.204 கோடியில் உயர்மட்ட மேம்பாலம் அமைய உள்ளது. 11 கிலோ மீட்டர் தூரத்துக்கு எங்கும் இணைப்புச் சாலைகள் இல்லாததால் புதிய பாலம் கட்டப்பட உள்ளது.

# கடன் தொல்லையால் விபரீதம்: நண்பருடன் செல்போனில் பேசியபடியே ரெயில் முன் பாய்ந்து வாலிபர் தற்கொலை

சென்னை, அக்.28–

"சென்னை எண்ணூர் அன்னை சிவகாமி நகர் 6வது தெருவில் வசித்து வந்தவர் கோகுல் பிரசாத் (31 வயது). இவரது தந்தை போட்டோ மணி, கடந்த ஆண்டு உடல் நலக்குறைவால் இறந்து போனார். முன்னதாக தந்தை உடல்நிலை சரியில்லாமல் இருந்தபோது மருத்துவ செலவுக்கு நண்பர்கள், உறவினர்கள் என பலரிடம் கோகுல் பிரசாத் கடன் வாங்கி உள்ளார். தற்போது தாயின் உடல்நிலை சரியில்லாத காரணத்தால் மேற்கொண்டு கடன் அதிகமாக வாங்கியதாக தெரிகிறது. கடன் கொடுத்தவர்கள் பணத்தை திருப்பிக்கேட்டு அவருக்கு தொல்லை கொடுத்ததாக கூறப்படுகிறது. இதனால் மன உளைச்சலில் இருந்த கோகுல் பிரசாத், தனது நண்பருடன் செல்போனில் பேசிக்கொண்டே எர்ணாவூர் கேட் அருகே சென்றார். பின்னர் தனது நண்பரிடம், "ரெயில் வருகிறது. நான் ரெயில் முன்பாய்ந்து தற்கொலை செய்து கொள்கிறேன்" என நண்பருடன் பேசிக்கொண்டே ரெயில் முன் பாய்ந்தார். இதில் ரெயிலில் அடிபட்டு சம்பவ இடத்திலேயே கோகுல் பிரசாத் பரிதாபமாக உயிரிழந்தார். இதுகுறித்து கொருக்குப்பேட்டை ரெயில்வே போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகின்றனர். இந்த சம்பவம் அந்த பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியது. ",



விழுப்புரம் மாவட்டம் செஞ்சி சட்டமன்ற தொகுதி சார்பாக மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வு 27 11 2025வியாழன் பிற்பகல் ஒரு மணி அளவில் செஞ்சி ஒன்றியம் கடலாடி கூட்டுப் பாதையில் தமிழ் உணவகவளாகத்தில் தொகுதி பொறுப்பாளர் நா. இராசநாயகம் தலைமையில்நடைபெற்றது இந்நிகழ்வில் மேல்மலையனூர் செஞ்சி ஒன்றிய நிர்வாகிகள் சிறு ணாம் பூண்டி ராஜா.நீலாம் பூண்டி ராஜா.அத்தியூர் அசோக் தமிழ்டியான் . ஆத்திப்பட்டு வெங்கடேஷ் சேகர் மலர் ராஜேந்திரன்.செஞ்சி நகர செயலாளர்.வீடியோ சரவணன் முரளி. ஷி.சரவணன்.சத்தியமங்கலம் ராங்கநாதன் உள்ளிட்ட திரளாகநிர்வாகிகள் பங்கேற்றனர்.

Published by **K.SABIULLA**,printed by **K.SABIULLA,** on behalf of **K.SABIULLA,** printed at **BEAUTIFUL** printers 6/1 devaraja Street,Triplicane chennai 600005.
puplished at 378/46.10th cross,Rajevnagar,manaparai trichy(dis) editor:**K.SABIULLA**, cell.78100-68421